# துணைத் தூதர் கிறிஸ் ஹோட்ஜஸ் வாழ்க்கை குறிப்பு



துணைத் தூதர் கிறிஸ் ஹோட்ஜஸ் சென்னையில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகத்தின் முதன்மை அதிகாரி ஆவார். இதற்கு முன்னதாக, ஆப்கானிஸ்தான் இடமாற்ற முயற்சிகளுக்கான ஒருங்கிணைப்பாளர் அலுவலகத்தில் (CARE) மூத்த ஆலோசகராகவும், அதற்கும் முன்னதாக அண்டை கிழக்கு விவகாரங்களுக்கான பணியகத்தில் ஒருங்கிணைப்பு உதவி, மற்றும் பத்திரிகை, பொது உறவு நயத்திற்கான துணை உதவி செயலாளராகவும், இஸ்ரேல்-பாலஸ்தீன விவகாரங்களுக்கான துணை உதவி செயலாளராகவும் இருந்தார்.

ஜெருசலேம் தூதரகத்தின் துணைத் தலைமை அதிகாரியாகவும் பாலஸ்தீன விவகாரப் பிரிவின் தலைவராகவும் அவர் பொறுப்பு வகித்தது அவரது கடைசி வெளிநாட்டுப் பணியாக இருந்தது. 2000ல் வெளியுறவு சேவையில் இணைந்த அவர், ஜெருசலேம், ஹனோய், வியட்நாம்; மற்றும் அக்ரா, கானாவில் பொது விவகாரங்கள் அதிகாரியாக பணியாற்றி உள்ளார். அத்துடன் மத்திய ஐரோப்பிய விவகாரங்களுக்கான அலுவலகத்தில் ஆஸ்திரியா, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து மற்றும் லிச்சென்ஸ்டைன் ஆகிய நாடுகளுக்கான துணை இயக்குநராகவும் இருந்திருக்கிறார். அவரது மற்ற சுற்றுப்பயணங்களில் சுவா, பிஜி மற்றும் ஜெர்மனியின் பிராங்பேர்ட் ஆகியவை அடங்கும்.

ஜார்ஜியா டெக்கில் சர்வதேச விவகாரங்களுக்கான மதிப்புறு இளநிலை பட்டம், ஜார்ஜ் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தில் சர்வதேச விவகாரங்களுக்கான முதுநிலை பட்டம், அமெரிக்க கடற்படைப் போர்க் கல்லூரியில் மூலோபாய ஆய்வுகளில் முதுநிலை பட்டம் உள்ளிட்டவற்றை கிறிஸ் பெற்றுள்ளார். 2018ம் ஆண்டுக்கான பொது உறவு நயத்திற்கான எட்வர்ட் ஆர். முர்ரோ விருதில் இரண்டாம் இடத்தை அவர் பிடித்தார், மேலும் 2019ம் ஆண்டில் பொது உறவு

நயத்தில் சாதனை படைத்ததற்காக பொது உறவு நய முன்னாள் மாணவர் சங்கத்தால் கௌரவிக்கப்பட்டார். ஜார்ஜியாவின் மரியட்டாவைப் பூர்வீகமாகக் கொண்ட அவருக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளனர்.